உண்மை நகல்:-

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

வனம் – காப்பு வனங்கள் – ஆடுகளுக்கு விதிக்கப்படும் மேய்ச்சல் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டு ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுப்புறம் மற்றும் வனத் (வனம்-13) துறை

அரசாணை (நிலை) எண்.47. நாள்: 3.3.2000

படிக்க:

1. 31.5.89-ஆம் நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனம் அரசாணை (நிலை) எண்.364.
2. அரசு கடித எண். 28827/வனம்-7/89-21 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள் 31.7.91.
3. 28.2.2000-ஆம் நாளிட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடிதம் எண். பி.எப்.1/14032/2000.

------

ஆணை:

31.5.89-ஆம் நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசாணை (நிலை) எண்.364ல் காப்பு வனப்பகுதிகளில் கால்நடைகட்கு மேய்ச்சல் கட்டணம் மற்றும் பட்டி அடைக்க கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு ஆணையிடப்பட்டது. பின்னர் பார்வை இரண்டில் கண்டுள்ள 31.7.1991-ஆம் நாளிட்ட அரசு கடிதத்தில் இந்த மேய்ச்சல் கட்டணம் கீழ்க்கண்ட இனங்களுக்கு திருத்தி அமைக்கப்பட்டு ஆணையிடப்பட்டது:-

ஆடு (ஒன்று) ரூ.2/-
மாடு (ஒன்று) ரூ.4/-

பட்டி அடைக்க ரூ.2.50
எருமை மாடு (ஒன்று) ரூ.6/-

2. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 23.2.2000 நாளன்று மதுரையில் வெளியிட்ட அறிவிப்பையடுத்து தற்போது, ஆடுகளுக்கு மட்டும் காப்பு வனப்பகுதிகளில் மேய்ச்சல் கட்டணம் வசூலிப்பதிலிருந்து விலக்களித்து அரசு இவண் ஆணையிடுகிறது. ஆனால் ஆடுகள் மேய்ப்பதற்கு தற்போது நடைமுறையில் உள்ள உரிமம் பெறுவது தொடர்ந்து நீடிக்கும்.

3. இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வருகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. அத்துறையின் அ.சா.கு.எண்.656/எப் எஸ்/பி/2000 நாள் 29.2.2000.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. இராஜரெத்தினம்
அரசுச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை-15.

த.பி.பா.

அனைத்து வனப்பாதுகாவலர்கள்.

மாவட்ட வன அலுவலர்கள்
(முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மூலமாக).

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

பொது பணித்துறை மற்றும் வனத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.

வனத்துறையின் அனைத்து பிரிவுகள்.

நிதித்துறை, சென்னை-9.

இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

// உண்மை நகல் //

கண்காணிப்பாளர் 31/3/2000

குபா/3.3